

# பனிமயம்

பிப்ரவரி 2023


ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

பனிமய அன்னையின் 16ஆவது தங்கத் தேர்ப் பவனிக்கான நமது காத்திருப்பு 300 நாள்களிலிருந்து தற்பொழுது 200 நாள்களுக்கும் கீழே வந்திருக்கிறது. தங்கத் தேர்த் திருப்பணிகளும், தொடர் பரிந்துரை மன்றாட்டும் 100 நாள்களைக் கடந்திருக்கின்றன. தொடர்ந்து நாம் ஆண்டவரின் இரக்கத்திற்காக மன்றாடுவோமாக.

இம்மாதம் 01 முதல் 11 வரை லூர்தன்னைக் கெபியில் அன்னையின் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறோம். லூர்து குன்றில் காட்சி தந்த நம் அன்னை செபம், தவம் இரண்டையும் வலியுறுத்துகிறார். அவரே நமக்காகப் பரிந்து மன்றாடி இவ்விரண்டு கொடைகளையும் பெற்றுத் தருவாராக!

இம்மாதம் 22ஆம் நாள் சாம்பல் புதனுடன் தவக்காலத்தையும் நாம் தொடங்குகிறோம். “நீங்கள் **மனந்திரும்பிச்** சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்” (மத் 18:3) என்றார் நம் ஆண்டவர் இயேசு. மனம் திரும்புவதற்கான வாய்ப்பை இம்மாதத்தில் ஆண்டவர் நமக்குத் தருகின்றார். “ஆண்டவரின் இரக்கம் எத்துணைப் பெரிது! அவரிடம் **மனந்திரும்புவோருக்கு** அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது” (சீஞா 17:29) என்பதை உணர்ந்து நாம் மனந்திரும்புவோமாக.

இவ்வாண்டுக்கான தவக்கால சிறப்பு நிகழ்வுகள் இவ்விதழின் வேறு பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. வாய்ப்புகளைப் பயன்படுத்தி மனந்திரும்புவோமாக, தவக்கால ஆசிகளைப் பெற்றுக்கொள்வோமாக.

நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசியால் நிரப்புவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்




உதயம் 23 தாரகை 6

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
**தூய பனிமய அன்னை பேராலயம்**
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**பங்குத்தலங்களுக்காக...**

நற்கருணையை மையமாகக் கொண்டு, நம்பிக்கை மற்றும் சகோதரத்துவக் குழுமங்களாக வளர்ந்து, அதிகத் தேவையில் இருப்போரைப் பங்குத்தலங்கள் வரவேற்கும்படியாக நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...


1. நிகரகுவாவின் குவாபா திருத்தலம்! ....................4
   அருள் மரி வேந்தன்
2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ........6
   செல்வராஜ் மிராந்தா
3. மரியன்னைப் புனிதர்கள் :
   திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ....................8
   அருள்பணி. குமார்ராஜா
4. பனிமயம் - மீள் பார்வை ....................10
   கலாபன் வாஸ்
5. பனிமய அன்னை -
   பனிமயம் பாடும் பாவலர்கள்....................12
   தி. சொர்ணராஜன் விக்டோரியா
6. நம் திருஅவை, நமது பெருமை
   திருத்தந்தையர்!....................14
7. விவிலியப் போட்டி ....................16
8. மாதம் ஒரு மாதா படம் ....................19
9. பனிமயப் பகிர்வு....................20
10. தவக்காலம் 2023 திருநிகழ்வுகள்....................24

புதிய காட்சிகள் : 3

மரியன்னை மலர்கள் : 7

# நிகராகுவாவின் குவாபா திருத்தலம்!




நிகராகுவா என்பது மத்திய ஆப்பிரிக்க நாடுகளுள் மிகப் பெரிய நாடு. அறுபது இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்நாட்டின் பெரும்பான்மையினர் கத்தோலிக்கர்கள். ஸ்பெயின் நாட்டின் காலனியாக இருந்ததால், ஸ்பானிஷ் மொழி பேசப்படுகிறது. ஸ்பானிஷ் மிஷனரிகள் கத்தோலிக்க நம்பிக்கையை 16ஆம் நூற்றாண்டில் கொண்டு வந்தனர்.

அங்குள்ள குவாபா 5000 மக்கள் தொகை கொண்ட ஒரு சிறு நகரம். அங்கே 1980ஆம் ஆண்டு அன்னை மரியா பெர்னார்டோ என்பவருக்கு ஏப்ரல் 15 முதல் அக்டோபர் 13 வரை ஆறு முறை காட்சி தந்து தம்மைப் பாவிகளின் தாயாக வெளிப்படுத்தினார்.

பெர்னார்டோ மார்ட்டினஸ் குவாபா பங்கு ஆலயத்தின் திருஅறைப் பணியாளர் (சக்ரீஸ்தர்) பணியைச் செய்து வந்த எளிய மனிதர். 1980 ஏப்ரல் மாதத்தில் பெர்னார்டோ மாலையில் மணியடிப்பதற்காகக் கோவிலுக்குச் சென்றார். கோவிலுக்குள்ளே மரியன்னையின் சுருபத்தைச் சுற்றி ஒளிவட்டம் இருப்பதைக் கண்டார். முந்தின நாள் தம் உதவியாளர் விளக்கை அணைக்காமல் சென்றுவிட்டதாக எண்ணி விட்டார். ஆனால், மீண்டும் ஒருமுறை அந்த ஒளி வட்டம் தோன்றியபோது, அன்னையின் அற்புதச் செயல் என்பதை உணர்ந்தார்.

மே மாதத்தில் ஒருநாள் ஆற்றங்கரையில் மீன் பிடித்துவிட்டுத் திரும்பியபொழுது,

அழகிய ஒரு பெண்ணைக் கண்டார். "நான் விண்ணிலிருந்து வருகிறேன். நானே இயேசுவின் தாய்" என்றார் அவர். மக்கள் நாள்தோறும் செபமாலை செபிக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்த அன்னை, "மக்கள் மனந்திரும்பாவிட்டால், மூன்றாம் உலகப் போரைச் சந்திக்க வேண்டியிருக்கும்" என்றார்.

பெர்னார்டோ இந்தக் காட்சியைப் பற்றி மக்களிடம் சொன்னபோது, சிலர் நம்பினார்கள், மற்றவர்கள் புறக்கணித்தார்கள். நம்பியவர்கள் பெர்னார்டோவுடன் சேர்ந்து செபமாலை செபிக்கத் தொடங்கினர்.

ஜூன் மாதம் 8ஆம் நாள் செபமாலை பற்றிய ஒரு காட்சியைக் கண்டார். செபமாலைப் புனிதரான தோமினிக்கைப் பின்பற்றி பலரும் செபமாலை செபித்துக் கொண்டே பவனியாக வருவதைக் கண்டார் அவர்.

செப்டம்பர் மாதத்தில் மரியன்னை மீண்டும் அவருக்குக் காட்சி தந்தார்கள். குவாபா நகர மக்கள் அன்னைக்கு ஒரு கோவில் கட்ட ஆர்வமோடிருப்பதாக பெர்னார்டோ அன்னையிடம் சொன்னார். அன்னையோ கற்களால் ஆன கோவில்களைவிட, உயிருள்ள கோவில்களாக உங்களையே கட்டி எழுப்புவதையே ஆண்டவர் விரும்புகிறார் என்றுரைத்தார்.

அக்டோபர் 13ஆம் நாள் இறுதி முறையாக பெர்னார்டோவுக்குக் காட்சி தந்தார் அன்னை. இம்முறை மக்களின் நம்பிக்கைக் குறைவை எண்ணி மரியன்னை கண்ணீர் சிந்தி அழுதார். பெர்னார்டோ அன்னையைத் தேற்றினார். துன்பங்களை சிலுவைகளாக ஏற்று வாழ அறிவுறுத்திய அன்னை இதுவே இறுதிக் காட்சி என்று சொன்னார். இருப்பினும், "நான் உன்னோடு இருப்பேன். நான் அனைவருக்கும் அன்னை அல்லவா?" என்றார்.

குவாபா அன்னையின் இறுதிச் செய்தி இதுவே: "உலகம் இன்று பல ஆபத்துகளைச் சந்திக்கிறது. எனவே, என் மகன் இயேசுவை நோக்கி மன்றாடுங்கள். நானே உங்கள் தாய். என்னை "பாவிகளின் அன்னை" என்று அழைத்து மன்றாடுங்கள்".

குவாபா அன்னை பெர்னார்டோவுக்கு ஒரு மன்றாட்டையும் கற்றுத் தந்தார்: "வெற்றிகளின் அன்னையே, மரியே, விண்ணகத் தந்தையின் அன்புநிறை மகளே, எங்களுக்கு நம்பிக்கையைத் தாரும். ஆண்டவர் இயேசுவின் அன்புத் தாயே, எங்களுக்கு எதிர்நோக்கைத் தாரும். தூய ஆவியாரின் நேசமே, எங்களுக்கு அன்பைத் தாரும்".

இந்தச் செய்தியெல்லாம் மக்கள் நடுவில் பரவ அங்கே ஆலயம் ஒன்று எழுப்பப் பட்டது. பல கட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பின் 1982ல் மறைமாவட்ட ஆயர் மேதகு போஸ்கோ ரொபெலோ குவாபாவை ஒரு திருத்தலமாக அறிவித்தார். நிகரகுவாவின் ஆயர் பேரவை 1994ஆம் ஆண்டு இக்காட்சிகளை நம்பிக்கைக்குரியவை ("worthy of belief") என்று அறிவித்தது.

இன்று குவாபா ஒரு தேசீய திருத்தலம். ஒவ்வொரு மாதமும் 8ஆம் நாள் பெருந்திரளான மக்கள் அங்கே கூடுகிறார்கள். இருப்பினும், அன்னை காட்சி தந்த செப்டம்பர் 8 மற்றும் அக்டோபர் 13 இரு நாள்களும் பெரு விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

அன்னையைக் காட்சியில் கண்ட பெர்னார்டோ தொடர்ந்து அன்னையின் காட்சிகளுக்கு சாட்சியாக வாழ்ந்தார். 1995ஆம் ஆண்டு தமது 65ஆம் வயதில் குருவாக அருள்பொழிவு செய்யப்பட்டார். 2000ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

நம் அன்னை தொடர்ந்து தம்மை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார். நாம் அவரது குரலுக்கு செவி மடுக்கிறோமா?

**அருள் மரி வேந்தன்**



# 21 பனிமய அன்னை பேராலய

## மலரும் நினைவுகள்...



1999ஆம் ஆண்டு இறுதியை ஒரு மாற்றத்தின் காலம் என்று சொல்லலாம். தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு S.T. அமலநாதர் ஆண்டகை 21.12.1999இல் ஓய்வு பெறப் போவதாகவும் மேதகு பீட்டர் பர்னாந்து ஆண்டகை தூத்துக்குடி மறைமாவட்ட ஆயராகப்போவதாகவும் செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. அதைப்போலவே மறைமாவட்ட முதன்மை குருவானவராக இருந்த அருள்தந்தை லொரன்சோ அடிகளாரும் மாறப்போவதாகப் பேசப்பட்டது.

2000 வருடம் ஆகஸ்டு மாதம் 5ஆம் நாள் பரிசுத்த பனிமய அன்னையின் விழா தேர்த்திருவிழாவாகக் கொண்டாடப்போவதாக தீர்மானித்து அதற்கான ஆயத்தப் பணிகளை மறைமாவட்ட அலுவலகத்தில் இருந்து அடிகளார் செய்துவந்தார். 2000 ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுவரை பரிசுத்த பனிமய அன்னை ஆலய பங்குக் குருவாகப் பொறுப்பேற்குமுன்பே அதன் பணிகளை அருள்தந்தை **இரத்தினராஜ்** அவர்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இறையடியார் அந்தோணி சூசைநாதரின் தம்பி மகனான அருள்தந்தை ஜோசப் இரத்தினராஜ் தூத்துக்குடியைப் பூர்வீகமாகக் கொண்டவர்.



திருஇருதயங்களின் ஆலய பங்கில் பிறந்து வளர்ந்தவர் என்றாலும் மிகவும் பரிச்சயப்பட்ட பரிசுத்த பனிமய மாதா பங்கு மக்களுக்கு - உங்களில் ஒருவனாக - என்ற உணர்வோடு பணியாற்றத் தொடங்கினார். தேர்த் திருவிழாவை நோக்கி நாட்கள் வெகுவேகமாக நகர்ந்ததால் - ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த தேரின் அடிப்பாகத்தின் உள்சட்டங்கள் பலதும் உளுத்துப் போயிருந்தன. நான்கு சக்கரங்களைத் தாங்கும் இரண்டு பருமனான (Axis) மரத்தடிகளும் மாற்றப்பட வேண்டியிருந்தது. அவை அனைத்தும் நல்ல முறையிலேயே செய்து முடிக்கப்பட்டன. தேர்த்திருவிழாவும் மிக ஆடம்பரமான முறையில் நடந்து முடிந்தது.

ஆஸ்திரேலியாவில் பெர்த் மறைமாவட்ட ஆயர் அவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். ஜாதிமத வரம்புகளைக் கடந்த, பெருங்கூட்டத்தைக் கண்ட பெர்த் மறைமாவட்ட ஆயர், இம்மண்ணில் வந்து உழைத்த மறைபரப்பாளர்களையும் மக்களின் ஒருமைப்பாட்டையும் வியந்து பாராட்டினார்.

திருவிழாக் கொண்டாட்டங்கள் நடந்து கொண்டிருக்கையில் ஒன்றைக் கவனித்தார். கோயில் மண்டபத்துக்கு முன்பிருக்கும் திறந்த வெளி நிரம்ப கூட்டமாக ஆட்கள் தரையில் அமர்ந்திருப்பதைக் கண்டு ஏதாவது செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்.

வார நாட்களில் ஞாயிறு அன்று மாலைத் திருப்பலி காண்பதற்கு நகரின் எல்லா பாகத்திலிருந்தும் மக்கள் வருவதையும் இடவசதி இல்லாததையும் கண்டார். எனவே அந்த இடைவெளியை மண்டபத்தோடு சேர்த்து கட்டி, கோத்திக் பாணியில் வாசல்களும் ஜன்னல்களும் அமைத்து கட்டுவதற்கு திட்டமிட்டார்.

பங்கில் போதுமான அளவு பணமிருந்ததால் திட்டத்தைச் செயல்படுத்த தகுந்த ஆட்களையும் பொறியாளர்களையும் தேர்வு செய்து பணியை ஒப்படைத்தார். மேற்கூரை காங்கரீட்டினால் கவிழ்ந்த பாணியில் சவுக்கமான காங்க்ரீட் சட்டங்களின் தாக்கத்தில் நிற்கும்படி நேர்த்தியாக கட்டி முடிக்கப்பட்டது. அந்த புதிய கட்டுமானம் கோயில் பிரதான வாசலுக்கு முன்பு உள்ள மண்டபத்தின் நீளத்தையும் அளவையும் அழகுறக் கூட்டியதால் இப்போது ஆலயத்தின் தோற்றப் பொலிவு கூடியிருப்பதோடு, மக்கள் சௌகரியமாக அமர்ந்து திருவழிபாடுகளில் கலந்து கொள்ள ஏதுவாகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஆலயப் பொருட்களின் பாதுகாப்பையும் அதிகரித்திருக்கிறது.

அவர் காலத்தில்தான் பங்குப் பேரவையின் செயல்பாடு நல்லமுறையிலே நடந்தது. சில உபகாரிகளின் உதவியால் புதிதாக கட்டப்பட்ட மண்டபப் பகுதியின் மேல் நவவிலாச சம்மனசுக்களின் சுரூபங்கள் நிறுவப்பட்டன.

தஸ்நேவிஸ் மாதா பெண்கள் பள்ளிக் கூடத்தின் அருகில் அந்தோணியார் சிற்றாலயம் சிறிதாக கட்டிமுடிக்கப்பட்டது. அவருக்குப்பின் வந்த குருக்கள் அதன் நீளத்தைக் கூட்டி அழகுபடுத்தினர்.

அவர் 2004ஆம் ஆண்டு மாறுதலாகிப் போகும்வரை பங்கு நிர்வாகத்தில் யாதொரு பிரச்சனைகளும் எழாமல் சுமூகமாக ஒடியது. திருவழிபாடுகளும் செவ்வனே நடைபெற்று வந்தன.

தொடரும்...



**செல்வராஜ் மிராந்தா**

62 மரியன்னைப் புனிதர்கள்

# திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்

(1927 - 2022)

## மரியன்னையின் விழுமியங்களை வாழ்ந்து காட்டியவர்



கடந்த 31.12.2022 அன்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் தமது 95ஆம் அகவையில் இறைவனடி சேர்ந்தபோது, இந்த நூற்றாண்டின் இணையற்ற ஒரு மாமனிதரை உலகம் இழந்துவிட்டதாக ஊடகங்கள் பேசின.

ஜோசப் ராட்சிங்கர் என்னும் இயற்பெயருடன் 16.04.1927 அன்று பிறந்த இந்த ஜெர்மனி நாட்டவர் 1951ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தமது 31ஆம் வயதிலேயே இறையியல் பேராசிரியாக நியமிக்கப்பட்ட இவர், இறையியல் மேற்படிப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு தலைசிறந்த இறையியலாளராக அறியப்பட்டார். ஜெர்மனியில் பல பல்கலைக்கழகங்களிலும் கற்பித்தார். மியூனிச் உயர்மறைமாவட்டப் பேராயராகவும், பின்னர் 1977ஆம் ஆண்டு கர்தினாலாகவும் உயர்த்தப் பட்டார். 1981ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் இவரை உரோமை "இறைநம்பிக்கைப் பேராயத்தின்" தலைவராக நியமித்தார். அதுமுதல் ஜான் பவுலின் வலக்கரம்போல செயலாற்றினார்.

திருத்தந்தை 2ஆம் ஜான் பவுலின் மறைவுக்குப் பிறகு 2005ஆம் ஆண்டு திருஅவையின் 265ஆம் திருத்தந்தையாகப்; பொறுப்பேற்று, 16ஆம் பெனடிக்ட் என்னும் பெயரில் எட்டு ஆண்டுகள் கத்தோலிக்கத் திருஅவையை வழிநடத்தினார்.

எல்லாத் திருத்தந்தையரையும் போலவே, பெனடிக்டும் அன்னை மரியாமீது சிறப்புப் பற்றுதல் கொண்டிருந்தார். தாம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கர்தினால்மார் கூட்டத்தில் உரையாற்றிய போது தன்னையும், தனது திருத்தந்தை பணியையும் அன்னை மரியாவின் தாய்மையின் பாதுகாப்பில் ஒப்படைப்பதாகக் குறிப்பிட்டார்.

1985ஆம் ஆண்டு கர்தினால் ராட்சிங்கராக இருந்தபோதே "மரியன்னையை மறக்காதிருக்க ஆறு உண்மைகள்" என்னும் படைப்பை வெளியிட்டிருந்தார். இவற்றின் வழியாகத் தாம் ஒரு சிறந்த சிந்தனையாளர், இறையியலாளர் என்பதை எண்பித்திருந்தார்.

1. மரியன்னை மரபுகள் மற்றும் மரியியல் நம்பிக்கைப் பேருண்மைகளில் கிறிஸ்துவே மையமாக இருக்கிறார்.
2. மரியியலில்தான் விவிலியமும், திருமரபும் சரியாக இணைகின்றன.
3. அன்னை மரியாதான் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும், யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் ஒன்றாக இணைக்கிறார்.



4. உண்மையான மரியன்னை பக்தி அறிவையும், உணர்வையும், மூளையையும், இதயத்தையும் சரியான விகிதத்தில் வைத்திருக்கிறது.

5. திருஅவையின் சிறந்த மாதிரி அன்னை மரியாவே. அவரில்தான் திருஅவை ஒரு மானிட இயக்கமாகவோ, நிறுவனமாகவோ குறுகிவிடாமல், நம்பிக்கையாளரின் ஒன்றிப்பாகத் திகழ்கிறது.

6. மரியாவில்தான் பெண்மையின் மாண்பும், தாய்மையும் நிறைவடைகின்றன.

திருத்தந்தையாக மாறியபின், ஒவ்வொரு நாளும் காலையிலேயே செபமாலை செபிக்கும் பழக்கம் கொண்டிருந்தார் பெனடிக்ட். “செபமாலை மரியாவைத் தொடர்ந்து, கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொரு கிறித்தவரின் மன்றாட்டு” என்பது அவரது பொன்மொழி. நம் குடும்பங்களிலும், நாடுகளிலும் அமைதி நிலவ செபமாலை செபிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். 2008ஆம் ஆண்டு மே 03 முதல் சனியன்று உரோமை மேரி மேஜர் பசிலிக்காவில் செபமாலை செபித்தபிறகு ஆற்றிய உரையில் “செபமாலை கடந்த காலத்தின் எச்சம் அல்ல. இன்றைய இளைஞர்களும், இளம்பெண்களும் இயேசுமீதும், அன்னை மரியாமீதும் காட்டும் அன்பின் வெளிப்பாடே செபமாலை” என்று உறுதிபடக் கூறினார்.

தமக்கு முந்தைய எல்லாத் திருத் தந்தையரையும் போலவே, மரியன்னைத் திருத்தலங்களைச் சந்திக்கும் பழக்கத்தைத் பெனடிக்டும் தொடர்ந்தார். 2006ஆம் ஆண்டு பிரசில் நாட்டின் **அபரசிடா** மரியன்னைத் திருத்தலம் சென்று திருப்பலி நிறைவேற்றினார். 2008இல் அமெரிக்காவிலுள்ள **வாஷிங்டன்** அமல உற்பவி தேசியத் திருத்தலத்துக்குச் சென்றார். அதே ஆண்டு பிரான்ஸ் நாட்டின் **லூர்து** திருத்தலத்துக்குத் திருப்பயணமாகச் சென்றார். 2010ஆம் ஆண்டு மே 13ஆம் நாள் போர்ச்சுகல் நாட்டின் **பாத்திமா** திருத்தலம் சென்று அன்னையை வணங்கினார். “எந்தத் திருத்தந்தையும் செல்லாமல் இருந்ததே இல்லை” என்று புகழ்பெற்ற இத்தாலியின் **லொரெட்டோ** திருத்தலத்துக்கு 2012 அக்டோபர் 04 அன்று சென்று, அங்குள்ள மரியன்னையின் இல்லத்தில் மன்றாடினார்.

எல்லாத் திருத்தந்தையரையும் போலவே, பெனடிக்டும் மரியன்னைக்கென்று சிறப்பு மன்றாட்டுகளை இயற்றினார். லொரெட்டோ திருத்தலத்தில் “மரியே, இளையோரைக் கண்ணோக்கும். இறந்து, உயிர்த்த இயேசு மீண்டும் எங்களுள் பிறந்து, எங்களின் இரவைப் பகலாக மாற்றச் செய்யும். லொரெட்டோ அன்னையே, விண்ணகத்தின் வாயிலே, எங்கள் கண்களை உயர்த்தி இயேசுவைக் காணச் செய்யும். அவரை எல்லாருக்கும் அறிவிக்க அருளும்” என்று மன்றாடினார். என்னே புதுமையான மன்றாட்டு!

மேற்சொன்ன அனைத்திலும், பெனடிக்ட் தமக்கு முந்தைய திருத்தந்தையரையே பின்பற்றினார். ஆனால், தம் முந்தையோர் செய்யாத மாபெரும் செயல் ஒன்றைச் செய்து, தாம் மரியன்னையின் அன்பு மகன் என்பதை உலகுக்கு உணர்த்தினார். 2013ஆம் ஆண்டு பிப்ரவரி 11 (லூர்து அன்னையின் விழா) அன்று திருத்தந்தை பணியைத் துறப்பதாக அறிவித்து உலகையே அதிரச் செய்தார்.

“தமது உடலும், மனமும் வலுவிழந்து விட்டன” என்னும் காரணத்தைச் சொல்லி உலகின் மாபெரும் பதவியை மிக எளிதாகத் துறந்தார். ஒன்பது ஆண்டுகள் “முன்னாள் திருத்தந்தை” என்னும் பெயருடன் “மறைந்த வாழ்வு” வாழ்ந்தார். இவ்வாறு, மரியன்னையின் எளிமை, தாழ்ச்சி, பற்றற்ற தன்மை, இறைத் திருவுளத்துக்குப் பணிதல் ஆகிய விழுமியங்களை வாழ்வில் காட்டி தமது உண்மையான மரியன்னை பக்தியை எண்பித்தார்.



அருள்பணி. குமார்ராஜா



# ‘பனிமயம்’ 2016 – மீள்பார்வை

33

**மடுமாதா திருத்தலம்**



14.01.2015, பொங்கல் திருவிழா **அன்று, திருத்தந்தை பிரான்சிசின் இலங்கைப்** பயணத்தின் இரண்டாம் நாள், கொழும்பு **கல்லே** மைதானத்தில் **ந**டைபெற்ற திருப்பலியில், **அருளாளர் ஜோசப் வாஸ்** அவர்களைப் **புனிதராக** அறிவித்தார்.

**மடுமாதா திருத்தலத்தில்,** ஐந்து லட்சம் இறைமக்கள் நடுவில் மரியன்னைச் சிறப்பு வழிபாடு நடத்தி மறையுரையாற்றியபோது, “இத்திருத்தலத்தில் தமிழர்கள், சிங்களர்கள் இருவரும் ஒரே குடும்பமாகக் கூடியுள்ளோம். போர்க்களத்தில் இத்திருத்தலம், அடைக்கலத் தலமாக இருந்ததுபோல, இப்போதும் இந்த இடத்தில் நாம் பாதுகாப்பாக உணர்கிறோம்” என நெஞ்சம் நெகிழப் பேசினார்.

மடுமாதா திருத்தலம், இலங்கைப் போர்க்காலத்தில் ஓர் அடைக்கலத் தலமாக விளங்கியது. போரின் கோரக் கைகளிலிருந்து தப்பிக்க, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே அகதிகளாக வந்து தங்கியிருந்தனர். இந்த நிகழ்வைத்தான், திருத்தந்தை தம் உரையில் நினைவுகூர்ந்தார்.

மடுமாதா, சிங்களவர், தமிழர் என்னும் இரு இனத்தவருக்கிடையே மட்டுமல்ல, இந்து, முஸ்லீம், பௌத்தம், கிறித்தவம் என்னும் மதத்தினரிடையேயும் நல்லிணக்கம் ஏற்படுத்தும் அமைதியின் அன்னை என்றால், அது மிகையல்ல.

– **அருள்பணி. குமார்ராஜா**



★ **பிப்ரவரி மாதம்** என்றாலே மாதாவின் பிள்ளைகள் எல்லாரின் நினைவுக்கும் வருவது, பரிசுத்த லூர்து மாதாவின் திருவிழாவாகத்தான் இருக்கும். அன்னை மரியின் திருத்தலங்களைப் பற்றி நினைக்கும்போது, மக்களின் மனதில் முதலில் வருவது லூர்து **நகரே.** உலகில் அதிகமாக இருக்கும் மாதாவின் கெபிகளில், லூர்து மாதா கெபிதான் முதலிடம் பெறும். இந்தியாவைப் பொறுத்தவரையில், லூர்துமாதா சுரூபம் இல்லாத கத்தோலிக்க ஆலயங்கள் இல்லை. லூர்து மாதா கெபி இல்லாத கத்தோலிக்க பங்குகள் இல்லை என்றே சொல்லலாம். அப்படி என்ன சிறப்பு இந்த லூர்து மலைக் காட்சிக்கு?

ஒவ்வொரு காட்சியிலும் அன்னை மரியாள், தான் விரும்புவது என்ன என்பதையும், தனது விருப்பத்தை நிறைவேற்ற மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் தனது செய்தியில் வெளிப்படுத்துவார்கள். ஆனால், தான் யார் என்பதையும், தனது இயல்பு என்ன என்பதையும் அன்னை மரியாள் வெளிப்படுத்தியது லூர்து நகர் காட்சியில்தான். “நானே அமல உற்பவம்” – என்று சிறுமி பெர்னதெத்துக்கு அன்னை மரியாள் தன்னை வெளிப்படுத்துகிறார்கள்.

தாய் அமலி என்றால், பிள்ளைகளும் அமலர்களாய்தானே இருக்க வேண்டும்? – **அருள்திரு. முனைவர் லெரின் டிரோஸ்.**

★ கடவுள், மனிதர்களாகிய நம்மைப் பல்வேறு நிலைகளில் அழைக்கிறார். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களாகிய நாம், நம்முடைய அழைப்பின் நோக்கத்தை உணர்ந்து, அந்நோக்கத்தை வாழ்வாக்கும் போதுதான் நம் அழைப்பினுடைய மேன்மை நமக்குப் புலப்படும். நமக்குக் கடவுளால் இடப்பட்ட அழைப்பினை நிலையாகப் பிடித்து வாழ்வதும், அதற்குத் தகுந்த அர்த்தத்தை ஏற்படுத்துவதும் நமது கையில் தான் இருக்கிறது. அதற்கு நான் செய்ய வேண்டியது ஒன்றே. அது நம்முடைய அழைப்பினை மனமுவந்து ஏற்று அதனை விசுவசிப்பதே. அத்தகைய விசுவாசம் நம்மை அகமகிழச் செய்யட்டும். – **சகோ. சேவியர் fsc**

**மனமாற்றத்தின் காலம்**

தவக்காலத்தில் “மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” – என்று திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனந்திரும்புதல் என்பது, பழைய பாவ வாழ்வை விட்டு, புதிய வாழ்வு வாழ்வது. தீமைகளைக் களைந்து, நன்மைகளில் நிலைத்து வாழ்வது. ஊதாரித் தனத்தை விட்டுவிட்டு, கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பது. சுருக்கமாகக் கூறினால், இறைவிருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன்படி வாழ்வது. கடவுளோடும், மனிதர்களோடும் ஒப்புரவாவது. மனந்திரும்பி வாழ, செபம், நோன்பு, நற்செயல்கள் ஆகிய மூன்றையும் பின்பற்ற வேண்டும். செபம், கடவுளோடு உள்ள உறவை வலுப்படுத்தி அவரிலே நிலைத்திருக்கச் செய்கின்றது. நோன்பு (தவம்) நமது தனி வாழ்வில் நிறைந்து கிடக்கும் தேவையற்ற, பயன்தராத மிகுதிகளைக் குறைத்து, நம்மை சுயக் கட்டுப்பாடு கொண்டவர்களாக மாற்றுகிறது. நற்செயல்கள் (தானதர்மம்) நம்மைப் பிறரோடு கொள்ளும் உறவில் ஆழப்படுத்தி வலுப்படுத்துகிறது. மனந்திரும்புதலுக்காக இச்செயல்களைச் செய்வோம். இறைவனில் வளர்வோம். – N. தாமஸ் ஜூடிக்ஸ்.

**இறை நட்புறவில்**

மனித வாழ்வில் உறவுகள் பல உள்ளன. எத்தனை உறவுகள் இருந்தாலும், உறவுகளையும் மீறி நட்புறவு மிகவும் இனிமையானதாகும். அதிலும், நல்ல நண்பர்கள் அமைந்துவிட்டால் வாழ்வில் வசந்தம் வீசும். தீய நண்பர்கள் அமைந்து விட்டால், வாழ்க்கையே வீணாகிவிடும். நட்பு என்பது, இருவர் ஒன்றுபட்டு வாழ்வதாகும். தன் நண்பனை வருத்தும் எல்லாத் துன்பங்களிலும் துணை நிற்கும் நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிதாகும். நண்பர்கள் யாவரிலும் நல்லவரும் வல்லவருமான இயேசுவையே, நண்பராக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், “உங்களை நண்பர்கள் என்றேன்” – என்கிறார் இயேசு கிறிஸ்து. மற்றெல்லாரையும்விட இயேசுவே, எல்லாத் துன்பங்களிலும் நம்மைத் தேற்றுகிறவராகவும், ஆறுதல் அளிப்பவராகவும் இருக்கின்றார். இயேசுவோடு நட்புறவு கொண்டு நிலைத்திருக்கும்போது, நமது வாழ்வில் இனிய விண்ணகம் கிடைக்கிறது. இயேசு நம்மோடு இல்லாத வாழ்வு கொடிய நரகமாகும். இயேசுவோடு இணைந்து வாழ்பவன் பெரும் செல்வன். இயேசுவைப் பிரிந்து வாழ்பவன் பெரும் ஏழை. இயேசுவோடுள்ள நட்புறவில் நிலைத்திருந்து, இறை அன்பைச் சுவைத்து வாழ்வோம். – **காவை. ஞானமலர்** (காவல்கிணறு).

**அழைப்பில் மகிழ்வு**

அழைப்பு என்றாலே அனைவர்க்கும் மகிழ்ச்சி தரக்கூடியது. விழாக்கள், திருமணம் மற்றும் பல சுப காரியங்களுக்கு அழைப்போடு செல்வது நமக்கு மதிப்பும், மரியாதைக்கு உரியதுமாகக் கருதப்படுகிறது. உலக வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அழைப்புகள் கடவுளாலே அருளப்படுகிறது. அழைப்பை ஏற்று, திறம்படச் செயல்பட்டு, இறையாட்சிக்குத் தகுதி உள்ளவர்களாக மாறுவோம். – **ரோஸ் சேவியர்.**



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 28

# பனிமயம் பாடும் பாவலர்கள்

### 1. தூத்துக்குடி பாவலர் M.J.முத்தையா பர்னாந்து



பாவலர், **தூத்துக்குடியில்** 1900-ஆம் ஆண்டில் **லாசர் பர்னாந்து, எலிசபெத் பர்னாந்து** ஆகிய தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். அவரது மனைவி **காணிக்கையம்மாள் கோமஸ்**. அவருக்கு 4 மகன்களும் ஒரு மகளும் இருந்தனர்.

உயர் நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு, உள்நாட்டு கப்பல் வணிகத்தில் பயிற்சி பெற்று முதுநிலைப் பட்டத்தை புனித ஜார்ஜ் கோட்டை ஆளுனரிடமிருந்து பெற்றார். அதன் அடிப்படையில் சிந்தியா கப்பல் நிறுவனத்தில் 3-ம் நிலை அலுவலராகப் பணியாற்றினார். எவ்வளவு காலம் அப்பணியில் இருந்தார் என்பது தெரிவதற்கில்லை.

தன் குடும்பத்தை பொருளாதாரத்தில் நிலை நிறுத்த போதிய பொருள் சேர்த்தபின், அவரது கவனம் தமிழ் இலக்கணம், இலக்கியம், நாடகம்பால் திரும்பியது. தமிழ் யாப்பிலக்கணத்தை அவர் அப்போது கற்றிருக்கவேண்டும். **புலவர் மரிய பூரணம் மஸ்கிரனாஸ்** (M.P.மஸ்கிரனாஸ்) அவர்களின் புதல்வர் **பேராசிரியர் ரம்போலா மஸ்கிரனாஸ்**, திருச்சி புனித வளன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியபோது, அவரோடு கலந்துரையாடி தமிழ் இலக்கண இலக்கியத்தில் தன் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்.

குழந்தைகளுக்கான தமிழ் இலக்கண நூல் ஒன்றை எழுதி, மதுரை தமிழ்ச் சங்கத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால், சங்கம் அந்நூலை ஏதோ ஒரு காரணத்திற்காக ஆமோதிக்கவில்லை என்று தெரிகிறது. பனிமய அன்னை ஆலயத்தில் அமலோற்பவ மாதா சபையில் உறுப்பினராக இருந்து அன்னையின் ஆண்டு விழாக்களின் போது மரியன்னை பற்றி நாடகங்கள் எழுதி அரங்கேற்றியுள்ளார். பாவலர் இயற்றிய பாடல் ஒன்று-இரண்டு மட்டுமே கைக்கு எட்டியது.

**இறைவியே பனிமயத் தாயே !**

வானவர்க்கரசி வல்லப மிகுந்த
வரமுதற் கடவுளின் தாயே !
மன்னவன் தாவீது மரபினுக் கணியே
மலர்முக வசீகர மணியே !
தாயெமையாளும் தயையுள்ளம் கொண்டாய்
தஞ்சமும் தம்பமும் நீயே !
ஆகையால் உனது திருப்பதம் தன்னை
அடியவர் அகல்வது இலையே !

பாவிகள் நாங்கள் தேவீநீ எங்கள்
பாவமே பொறுத்திட வேண்டும்
பரம தெய்வீகன் திருவடி மறவா
பணிசெய்ய மதிதர வேண்டும்.
ஜீவியம் இங்கே சதமல்ல எனவே
தேர்ந்திட மதிதர வேண்டும்.
செல்வமும் புகழும் நிலைஎன மயங்கும்
செயலினைத் திருத்திட வேண்டும்.

நேர்மையும் அன்பு நிலவிடும் வழியில்
நிலைத்திட மதிதர வேண்டும்.
நிகர்எவர் எனக்கு எனும் அகங்காரம்
நினைவினைத் திருத்திட வேண்டும்.
ஆவியே பிரியும் சமயத்திலுனையே
அழைத்திட மதிதர வேண்டும்.
தேவியவ் வேளை தெரிசனத் தந்தே
சேயரையாட் கொள்ள வேண்டும்.

வான்மதி எங்கள் குலத்தவர் தாயே
பஞ்சமும் வறுமையும் கொள்ளை
நோய் நடமாட மனமது கலங்கி
நொந்த ழுகின்ற உன்மக்கள்
கூறிடும் குறைகள் தீர்ந்தெமை யாள்வாய்
கோம கராகிய தாயே
குணவதி யுவதி திருமந்திர நகரின்
இறைவியே பனிமயத் தாயே !

(இயற்றியது : 5-8-1946)

**பனிமயமே ! வனிதா ரமணி !**

*(பல்லவி)*

பனிமயமே ! வனிதா ரமணி !
பாரத ராணி நீ ! பரம கல்யாணி நீ !
- பனிமயமே

*(அநுபல்லவி)*

புனிதகு மாரிநீ ! பூவதி காரிநீ !
புண்ணிய வாரிநீ ! பூதசம் ஹாரிநீ !
- பனிமயமே

*(சரணம்)*

கனவிலும் நினைவிலும் கரைகடல் எங்கும்
காலமெல்லாம் எங்கள் கருத்தினில் தங்கும்
தனமே வரமருள் சுகமே ! - பரதவர்
தாயே ! விமல மது கரமே !

*(மகுடம்)*

நிகரில்லாத மறை யவர் புகழ் நவநிதியே !
பனிகுளிர் நடு நிசியினில்
நீத னவனைய நீத வம்புவிமீ தருளிய தயாபரியே !
அதிமகத் துவ மனோ ஹரியே !
துதி மிகுத்த சரு வேஸ் பரியே !
பவ மெனுங் கொடுவெயி லறவரு ளுனதே
பதமல ரன்றெது தரும் நிழலே !
தினகர னுடைமுன் ருடுமதி சுடரது
திகழ்வதி லதன்பொரு ளுனையடை வார் !
நினைக்கும் எதற்கும் புரக்கும் சுரக்கும்
நிஜத்தைப் புகட்டும் சமத்வமே !
தருணமே ! அருள் மரியே மதிபதாம்
புஜமலரே சரணமே ! ஹம்றஸத்வனி !
- பனிமயமே

பாவலர் அவரது வாழ்க்கையில் நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியை குறிப்பிட்டே ஆகவேண்டும். தூத்துக்குடிக்கு அந்நாட்களில் ஆண்டு தோறும் சர்க்கஸ் கம்பெனி ஒன்று முகாமிட்டு வீர தீர விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவதுண்டு. ஓர் ஆண்டிலே நடந்த சர்க்கஸ் விளையாட்டில் சர்க்கஸ் வீரர் நிலத்தில் இருந்து குதித்தெழுந்து அந்தரத்தில் இரண்டு முறை குட்டிக்கரணம் போட்டு நிலத்தில் இறங்கினார். ஆனால் நிகழ்ச்சித் தொகுப்பாளர் சர்க்கஸ் வீரர் மூன்று முறை குட்டிக்கரணம் போட்டதாக அறிவித்தார். கூட்டத்திலிருந்த பாவலர் முத்தையா அந்த அறிவிப்புக்கு ஆட்சேபம் தெரிவித்து, சர்க்கஸ் வீரர் இரு குட்டிக் கரணங்களையே போட்டார் என்றும், தான் மூன்று குட்டிக்கரணம் போட்டுக் காட்டுகிறேன் என்று சவால் விடுத்து, களத்தில் இறங்கி விட்டார்! அதைச் செய்தும் காட்டி மக்களின் பாராட்டைப் பெற்றார். அன்றிலிருந்து அவருக்கு 'துள்ளி முத்தையா' என்ற பெயர் வழங்கலாயிற்று !

மரியே வாழ்க !



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

நம் திருஅவை, நமது பெருமை - 14

# திருத்தந்தையர்!



**திருத்தந்தையர்கள்.** கத்தோலிக்கத் திருஅவையின் வரலாற்றில் புனித பேதுரு முதல் இன்றைய பிரான்சிஸ் வரையில் 266 திருத்தந்தையர்கள் நம்மை வழிநடத்தி இருக்கிறார்கள். திருஅவையின் தொடக்கக் காலத்திலிருந்து இன்று வரை அனைத்துத் திருத்தந்தையரின் வாழ்வும், பணிகளும் பற்றிய விபரங்கள் நம்மிடம் இருக்கின்றன என்பதே பெருமிதமான ஒரு தரவுதான். காரணம், எத்தனையோ இதர சபைகள், இயக்கங்கள், ஆன்மீக மடங்களில் இந்த வரலாறு கிடையாது.

இந்த 266 திருத்தந்தையர்களில் 81 பேர் (30%) புனிதர்கள் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றனர் என்பது பெருமை தரும் செய்தி. கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் 27 இறைஇரக்கத்தின் ஞாயிறு அன்று ஒரேநாளில் திருத்தந்தையர் 23ஆம் ஜான், 2ஆம் ஜான்பவுல் இருவருமே புனிதர்களாக உயர்த்தப்பட்டனர். இன்னும் நான்கு திருத்தந்தையர் - 9ஆம் பயஸ், 12ஆம் பயஸ், 6ஆம் பவுல், முதலாம் ஜான் பவுல் - "அருளாளர்" என்ற நிலையில் இருக்கின்றனர்.

மிக நீண்ட காலம் திருத்தந்தையாகப் பணியாற்றியவர் 9ஆம் பத்திநாதர் (1846-78) - மொத்தம் 32 ஆண்டுகள். மிகக் குறைந்த காலம் பொறுப்பு வகித்தவர் 2ஆம் ஸ்டீபன் (கி.பி. 752) - ஒரே ஒருநாள் மட்டுமே. இந்த 265 பேரில், விதிவிலக்கான ஓரிருவர் தவிர, அனைத்துத் திருத்தந்தையருமே மாமனிதர்கள்தாம். இருப்பினும், அவர்களிலும் காலத்தை வென்று வரலாற்றின் புகழ் ஏட்டில் இடம் பெற்ற திருத்தந்தையர் என்று சிலரை நாம் குறிப்பிட்டு, அவர்களால் பெருமையடையலாம்.

**1. புனித பெரிய கிரகோரியார்:** (540-604). திருத்தந்தையாகவும், மறைவல்லுனராகவும், புனிதராகவும் விளங்கிய கிரகோரியார் ஒரு பெனடிக்டைன் சபைத் துறவி, திருத்தந்தையாக உயர்த்தப்பட்ட முதல் துறவியும் அவரே.

14 ஆண்டுகள் மட்டுமே திருத்தந்தையாகப் பணியாற்றிய கிரகோரியார் மாபெரும் மாற்றங்களுக்கு வித்திட்டார். கிறித்தவத்தில் நிலவிய பல அநீதிகள், குறைகளைக்





களைந்தார். திருவழிபாட்டில் மறுமலர்ச்சியை உருவாக்கினார். இன்றளவும் புகழ் பெற்று விளங்கும் "கிரகோரியன் இசை"யினை அறிமுகப்படுத்தியவர் அவரே. மறைபரப்புப் பணியிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். முதல் ஆயிரம் ஆண்டுகளின் மிகப் பிரபலமான திருத்தந்தை என்னும் பெருமை கிரகோரியாரையே சாரும்.

**2. புனித பெரிய சிங்கராயர் (முதலாம் லியோ)** (கி.பி.461) : ஐந்தாம் நூற்றாண்டில் திருஅவை சந்தித்த பல்வேறு விதமான இறையியல் சர்ச்சைகள் மற்றும் குழப்பங்களின் நடுவில் தெளிவைக் கொண்டுவர இறைவனால் தரப்பட்ட கொடையே திருத்தந்தை சிங்கராயர்.



எகிப்து, ஸ்பெயின் நாடுகளில் முன்னின்ற பல இறையியில் குழப்பங்களுக்குத் தமது எழுத்தாலும், சொல்லாலும் விடை பகர்ந்தார். இயேசு ஒரே ஆள், ஆனால் இறை மற்றும் மானிட இயல்பு என ஈரியல்புகளைக் கொண்டிருந்தார் என அறிக்கையிட்டார். கி.பி. 451ஆம் ஆண்டில் நடைபெற்ற கால்சீடன் பொதுச் சங்கத்தில் இந்த நம்பிக்கை அறிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. மறைவல்லுநர் என அறிவிக்கப்பட்ட புனித சிங்கராயரின் எழுத்தோவியங்கள் இன்றும் திருப்புகழ்மாலை யில் இடம்பெற்றுள்ளன.

**3. புனித பெரிய நிக்கொலாஸ்** (858-867):



திருஅவையின் நீண்ட வரலாற்றில், 266 திருத்தந்தையரில், மூவர் மட்டுமே "பெரிய" என்னும் சிறப்பு அடைமொழியுடன் அழைக்கப் படுகின்றனர். புனித நிக்கொலாஸ்தான் மூன்றாமாவர்.

ஒன்பதாம் நூற்றாண்டில் புதிய குழப்பங்கள், பிளவுகளால் திருஅவை வலிமை குன்றியபோது, இறையருளால் வலிமைப் படுத்தியவர். இறைநம்பிக்கை மற்றும் அறநெறியில் (doctrines of faith and morals) திருத்தந்தையின் போதனை தவறற்றது என்று உருவாக்கியவர். மறைபரப்புப் பணிகளை ஊக்கப்படுத்தியவர்.

**4. அருளாளர் ஒன்பதாம் பத்திநாதர்** (1792-1878):



பத்தொன்பதாம் நூற்றாண்டின் மாபெரும் திருத்தந்தையாகக் கருதப்படுபவர் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர். மிக நீண்ட காலம் (32 ஆண்டுகள்) பொறுப்பு வகித்த இத்திருத்தந்தை அன்னை மரியாவின் அமல உற்பவத்தை நம்பிக்கை உண்மையாக (Marian dogma) அறிவித்தார். முதலாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி, பாப்பிறையின் தவறாவரத்தை (Papal Infallibility) நிலைநாட்டினார். 2000ஆம் ஆண்டு "அருளாளர்" நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

தொடரும்.....

**"கிறிஸ் மிலியன்"**





# விவிலியப் போட்டி 97

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

**திருவெளிப்பாடு அதிகாரங்கள் 1 முதல் 5 வரை)**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. அரியணை முன் .................................... தீவட்டிகள் எரிந்து கொண்டிருந்தன.
2. அவர்தம் வலக்கையில் .................................... விண்மீன்களைக் கொண்டிருந்தார்.
3. அது .................................... முத்திரை பொறிக்கப்பெற்று மூடப்பட்டிருந்தது.
4. ஆசியாவில் உள்ள .................................... திருச்சபைகளுக்கும் யோவான் எழுதுவது.
5. .................................... விளக்குத் தண்டுகள் .................................... திருச்சபையையும் குறிக்கும்.
6. அக்கண்கள் மண்ணுலகெங்கும் அனுப்பப்பெற்ற கடவுளின் .................................... ஆவிகளே.
7. அதற்கு .................................... கொம்புகளும், .................................... கண்களும் இருந்தன.
8. அவர் அந்த .................................... முத்திரைகளையும் உடைத்து ஏட்டைப் பிரித்து விடுவார் என்று கூறினார்.
9. .................................... விண்மீன்கள் .................................... திருச்சபைகளின் வானதூதர்களைக் குறிக்கும்.

**குறிப்பு : கிடைக்கும் விடைகள் முழுமையான எண்ணைக் குறிக்கும்**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.02.2023**

## விவிலியப் போட்டி 96

**சனவரி 2023** **விடைக்குறிப்புகள்**

**மத்தேயு நற்செய்தி (அதிகாரம் 3 முதல் 6 வரை**

| | | |
|---|---|---|
| 1. | இறைவேண்டல் | மத் 6:5 |
| 2. | நோன்பு | மத் 6:16 |
| 3. | தர்மம் | மத் 6:3 |
| 4. | அன்பு | மத் 5:44 |
| 5. | இரக்கம் | மத் 5:7 |
| 6. | பணிவிடை | மத் 4:11 |
| 7. | நல்லுறவு | மத் 5:24 |
| 8. | நிறைவு | மத் 5:48 |



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**181**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**182**



**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 182**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**

**சரியான விடை எழுதியவர்கள் : 104**

**விடை எழுதிய அன்பியங்கள் : 26**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. குழந்தை இயேசு அன்பியம் **எமல்டா**
2. லூர்து மாதா அன்பியம் **ரஜூலா ஜான்போஸ்கோ**
3. மணல் மாதா அன்பியம் **ஹெபிட்டா**
4. மிக்கேல் அதிதூதர் அன்பியம் **ஷீபா**

**பாராட்டுக்குரியவர்கள் : 100**

5. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**

6. சரோஜா
7. பிருந்தா சார்லஸ்
8. ஜெயா
9. லூக்காஸ் சகாயம்
10. ரீனா மொறாயிஸ்
11. இருதயம்மாள் கபிரியேல்
12. டெல்பினஸ்

**அன்னை தெரசா**

13. சுகன் மோனிஷா
14. சுரேஷ் பிரேமா
15. ஜூலியஸ் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**

16. டென்சி

**கிறிஸ்தரசர்**

17. செலஸ்கி கிளமென்ட்
18. ரெக்ஸ் கிரீன்வெல்
19. ஜூலியட் சாவியோ
20. லூரட் வசந்த்
21. எஃப்ரின் ஜூலியா

**தஸ்நேவிஸ் மாதா**

ஒருவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**

22. பிரின்சி
23. சகாயராஜ் தனராஜ்

**பாத்திமா மாதா**

24. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
25. ஜெசிந்தா கான்ஸ்டன்
26. ஸ்டெஃபி ரீகன்
27. மைக்கேல் ஜெனிட்டா
28. ராஜா ரீனா
29. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**

30. இருதயம்மாள் கொன்சால்
31. சித்ரா மோத்தா
32. லூர்து லினட்

**ஜெபமாலை மாதா**

33. சகாயம்மாள் பெனடிக்ட்
34. ஆரோக்கியசாமி
35. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**

36. அந்தோனிசாமி
37. ட்ரைபேனா
38. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**

39. வெனிட்டாள்
40. ஜெயா அகஸ்டின்
41. சாந்தி ஆல்ட்ரின்
42. ட்ரினிஷா
43. சார்லட்
44. எலிஜா நோவா

**குழந்தை தெரசா**

45. கிறிஸ்டி லிஸ்டன்
46. ஷோபனா கோமஸ்
47. பெனி மொறாயிஸ்
48. பெர்லி டென்சன்
49. அதியன்

**குழந்தை இயேசு**

50. மோனிகா செபாஸ்டின்
51. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**

52. ஃபிலோ கோமஸ்
53. ஜெனோ சேவியர்
54. ரம்யா
55. ரோஸ்லின் தாமஸ்
56. சாண்டினா
57. ஆலிவர் வி. ராயன்
58. சகாயராணி

**மணல் மாதா**

59. கெயிட்டன் ஃபர்னான்டோ
60. ரொசாரி கோமஸ்
61. ஜெயந்தி

**மிக்கேல் அதிதூதர்**

62. எல்சிட்டா
63. ஷீபா
64. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**

65. மெர்சி கோமஸ்
66. ஜூடு ரதி
67. சுரேஷ் ஆனி பவுலடியார்
68. லீமாரோஸ் ஜாய்
69. ராஜா ரோஸ்லின்
70. ரஸ்கின் வசந்தா

**பரிபூரண மாதா**

71. ஜெனிஷா
72. மெடோனா

**பொம்பெயி மாதா**

73. லூடா கான்ஸ்டன்
74. மாத்யூ கர்டோசா
75. தெரசா பிரகாஷ்
76. இம்மாக்குலேட்
77. டிஃபானி அண்டோ

**இராயப்பர்**

78. ஷைனி
79. நேவிசம்மாள்

**சவேரியார்**

80. டெலிலா அமலன்
81. ஆரோக்கியராஜ் ஹெலினா
82. ஜோர்னல் ஜென்சி
83. அனுஷ்யா பீட்டர்
84. ரூபா மனுவேல்
85. சகாயம் ஆண்டன்

**செபஸ்தியார்**

86. ஜெசிலா சேவியர்
87. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**

88. நேசம்
89. ஜூடி ஆரோக்கியராஜ்
90. டிஜேபிஆர் இராயன்
91. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**

92. செலஸ்டின்
93. விஜி சகாயராஜ்
94. எல்சிற்றா ஆனந்த்

**சூசையப்பர்**

95. ரூபி கொர்னேலியுஸ்
96. மென்சி
97. கிறிஸ் ரிஜோ
98. ஹேமா சேவியர்
99. மோனிஷா
100. ஜூடி கெஜேந்திரன்

**திருச்சிலுவை**

101. சரோலின் கில்டன்
102. கயித்தான் ரமணி

**வியாகுல மாதா**

103. கெலிண்டன்
104. மார்ஷல் அஞ்சு

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 78

### பரிசு பெறுபவர்கள் : 4

| | | | |
|---|---|---|---|
| 105. தூத்துக்குடி லூர்தம்மாள்புரம் | **சகாயராணி** | 107. திருச்சி | **ஜான்சி ராணி** |
| 106. தூத்துக்குடி காந்தி நகர் | **யூஜினியா** | 108. கும்பகோணம் | **மெட்டில்டா மேரி** |

### பாராட்டுக்குரியவர்கள் : 74

**ஆலந்தலை**
109. ஃபொன்சேகா
110. மரியம்மாள்
111. மேரி லோபோ
112. சகாயராணி
**வீரபாண்டியன்பட்டணம்**
113. ஆன்ட்ரின் சில்வேரா
114. ஷாந்தினி
**ஆறுமுகனேரி**
115. தொம்மை அந்தோனி
**சேதுக்குவாய்த்தான்**
116. ஞானம் பாலசிங்
**புதியம்புத்தூர்**
117. ஹெலன் அன்னமணி
**சென்னை**
118. கமலஜோதி ஜெயசீலன்
119. ஒஃபிலியா தாமஸ்
120. எட்வர்ட்
121. வின்செந்தி
**பாளையங்கோட்டை**
122. பிரேமா குணசீலன்
123. டெனிசா ஃபர்னான்டோ
124. சுவர்ணா
125. ரோசி
**கயத்தாறு**
126. அமல்ராஜ்
**உரியூர்குப்பம்**
127. சகோ. லெட்டீசியா
**பெரியகுளம்**
128. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
129. மரிய மதலேன்
130. ஜெர்மேன்
131. ரொசாலி
**கோயம்புத்தூர்**
132. சகோ. லூக்காஸ்
133. ஆஷா தனசீலன்

**பல்லடம்**
134. பிரான்சிஸ் ஆர்லன்
திருமானூர், கும்பகோணம்
135. பீட்டர்
**அரக்கோணம்**
136. குமாரி சந்திரசேகர்
**திருச்சி**
137. மோனிட்டா கிறிஸ்டி
138. மேத்யூ விவேக்
139. டோனி
140. சில்வியா மேரி
**சேலம்**
141. சூசைராஜ்
**மதுரை**
142. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
143. ஹென்றிதாஸ்
**பாம்பன்**
144. சுதா
**பரமக்குடி**
145. சீமோன் விமல் சாந்தி
**கும்பகோணம்**
146. குழந்தை தெரஸ்

**<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>**
**திரு இதயங்களின் பேராலயம்**
147. பெனிட்டா
148. சுசீலன்
149. ரமோலா கமிலஸ்
150. ரிமோல்டா
151. ஜேன் கிளைட்டன்
152. ஜூலியட் வாஸ்
**குருஸ்புரம்**
153. ஆசீர்வாதம்
154. தமிழ்ச் செல்வன்
155. பௌவுசி ஜோ மைக்கேல்
156. டெல்ஃபின்
157. பிளசி செல்வராஜன்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
158. சுகிர்தா
**யூதா ததேயு கோவில்**
159. ரோஸ் சேவியர்
160. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
161. சாந்தினி
162. ரியாலினோ
163. பேபி வால்டர்
164. அன்சிட்டா
165. ரமேஷ் நர்மதா
**லூர்தம்மாள்புரம்**
166. ரெனிஸ்டன் ஜெர்லின்
**சார்லஸ் கோவில்**
167. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
168. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
169. லிஜியா ஃபர்னான்டோ
170. ஜெசிந்தா ஃபர்னான்டோ
171. செக்கரியா சாமுவேல்
**இஞ்ஞாசியார்புரம்**
172. அற்புத செல்வி
173. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
174. விர்ஜின்
175. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
176. சுஜாதா மகேஷ்
177. மென்சிலா லொயோலா
**திரேஸ்புரம்**
178. கோல்வின் ஜேசுராஜ்
179. ஃபிலோ சான்ட்ரியா
180. ஜெடுலியா
**பாத்திமா நகர்**
181. ஹேம்லின் விஜய்
**பெத்தனி கான்வென்ட்**
182. சகோ. ஜெமினா

### உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

மாதம் ஒரு மாதா படம் : 37



# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 43)

## பிப்ரவரி - 2023

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்முனைவர் குமார்ராஜா** | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி பால் ரோமன்** | 94889 42202 |
| களப் பணியாளர் | : | **சகோதரர் பெல் கிளிண்டன்** | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் காலை 06.00 - 06.30*
*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *கூட்டுத் திருமணம் : 20.08.2023*
- ✓ *உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.05.2023*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் :*
  *உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.30 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*



## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

427. **புத்தாண்டு நள்ளிரவுத் திருப்பலி** 01.01.2023 ஞாயிறு அன்று நடைபெற்றது, நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. அன்று காலை 08.00 மணிக்கு **மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை** புத்தாண்டுத் திருப்பலி நிறைவேற்றி, 3 குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கினார்கள்.

428. ஜனவரி மாதத்திற்கான விவிலியப் பாசறை (எண்: 90) **"விவிலிய ஆசிகள்"** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 03.01.2022 மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. பங்கு மக்கள் 27 பேரும், ஆசிரியர் பணிப் பதிவட்டை புதுப்பித்தலுக்காக 25 பேரும் என மொத்தம் 57 பேர் கலந்துகொண்டனர்.

429. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு 05.01.2023 வியாழன் மாலை 05.30 திருப்பலி சிறப்புத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் திருத்தந்தையின் திருவுருவப் படத்திற்கு மலர்கள் தூவி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

430. தைப் பொங்கல் பெருவிழாவை முன்னிட்டு 15.01.2023 ஞாயிறு காலை 06.30 திருப்பலியில் நிறைவில் வந்திருந்த அனைவருக்கும் **பொங்கல்** வழங்கப்பட்டது. அன்று காலை 10.30 மணிக்கு மறைக்கல்வி மாணவர் நடத்திய **"பொங்கல் கலைவிழா"** அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. தொடர்ந்து, பங்கு இளையோர் இணைந்து நடத்திய **பொங்கல் விளையாட்டுப் போட்டிகள்** பேராலய வளாகத்தில் நடைபெற்றன. திரளானோர் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.

431. தமிழக **ஆயர் பேரவையின் கூட்டம்** தூத்துக்குடி ஆயர் இல்லத்தில் நடைபெற்றதை முன்னிட்டு 18.01.2023 வியாழன் மாலையில் திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நடைபெற்ற தமிழக ஆயர்களின் கூட்டுத் திருப்பலியில் நமது பங்கு மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். அதை முன்னிட்டு அன்றைய மாலைத் திருப்பலி நம் பேராலயத்தில் நடைபெறவில்லை. மறுநாள் (19.01.2023) பல ஆயர்களும் நம் திருத்தலம் வந்து பனிமய அன்னையைத் தரிசித்துவிட்டுச் சென்றனர்.

432. **"திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்கான"** மூன்றாம் சனி நோன்பு வழிபாடு **(27)** 21.01.2023 அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த 100 இளையோருக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 115. | மரியோ ஜீசஸ் | ராஜேஷ் - பிரிகானா | 08.01.2023 | சிந்தாத்திரை |
| 116. | ஆன்ஃபி இப்பானா | அன்டோ - டிஃபானி | 08.01.2023 | பொம்பெய் மாதா |
| 117. | ரியா ரென்சி | ரெடால்ப் - ப்ரீத்தி | 08.01.2023 | திவ்யபாலன் |
| 118. | கிறிஸ் ஜெஃபின் | ஜெய்சன் - பிரான்சினா | 22.01.2023 | திருச்சிலுவை |
| 119. | இஷான் | கிறிஸ்டோபர் - பெல்சி | 29.01.2023 | சிறுமலர் |



*வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 134. | பவுல் ஜேக்கப் | நித்யா - ஜெயா | 25.12.2022 | சவேரியார் |
| 135. | ஜோசப் கிரிஸ் | டொமினிக் - லீனா | 01.01.2023 | காவல்தூதர் |
| 136. | மேக்டலின் ஜெஸி | லியோன் - ஸ்மைல்டா | 01.01.2023 | வியாகுலமாதா |
| 137. | ஸ்னோவிகா | ஜெயகுமார் - நிகிலா | 01.01.2023 | கிறிஸ்தரசர் |
| 138. | கெஃபிரா | அசோக் - கமலா | 14.01.2023 | அன்னை வேளாங்கண்ணி |
| 139. | கெசியா | அசோக் - கமலா | 14.01.2023 | அன்னை வேளாங்கண்ணி |
| 140. | மனீஷ் தாமஸ் | ஷரான் - ரோஸ்லின் | 28.01.2023 | சிறுமலர் |



*ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 108. | பென்ஸ் சிபின் - சிபோரா | தஸ்நேவிஸ் மாதா | 09.01.2023 |
| 109. | மார்ட்டின் - ஜெனிஷா | பரிபூரண மாதா | 23.01.2023 |



*இறைவனைப் போற்றுகிறோம்*

### 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 28 | ஜெயந்தியம்மாள் | ஜூடு | 18.01.2023 | வியாகுல மாதா |



*செபிக்கின்றோம்*

### 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 136. | பார்பரம்மாள் | சாம்சன் | 05.01.2023 | மிக்கேல் அதிதூதர் |
| 137. | லாசரம்மாள் | ஜோசப் ரவேல் | 14.01.2023 | பொம்பெய் மாதா |



| | | | | |
|---|---|---|---|---|
| 138. | அனிஷா | கில்பர்ட் | 13.01.2023 | அன்னை தெரசா |
| 139. | அலங்காரம் | ராஜேஸ்வரி | 16.01.2023 | சூசையப்பர் |
| 140. | விஜிலியா | குயின்டஸ் | 18.01.2023 | அன்னை தெரசா |
| 141. | ஜெயந்தி | ஞானம் பர்னாந்து | 18.01.2023 | வியாகுல மாதா |
| 142. | லூர்டஸ் பர்னாந்து | பிச்சையா | 19.01.2023 | காவல் தூதர் |
| 143. | ஜோசபின் மோத்தா | மனுவேல் மோத்தா | 24.01.2023 | பொம்பெய் மாதா |

## நடைபெற இருப்பவை

- ★ 01-02-2023 புதன் முதல் 11-02-2023 சனி வரை **புனித லூர்து அன்னை கெபி**யில் அருளிக்க ஆசீரும், திருப்பலியும் நடைபெறும். 10-02-2023 வெள்ளி அன்று மாலை 6.30 மணிக்கு மாலை ஆராதனையும், 11-02-2023 சனி அன்று காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி யும், மாலை 6.30 மணிக்கு புனித லூர்து அன்னையின் சப்பர பவனியும் நடைபெறும்.
- ★ **முதல் வியாழன் திருமணி ஆராதனை** 02.02.2023 வியாழன் மாலைத் திருப்பலி முடிந்ததும் நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.
- ★ 03.02.2023 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 04.02.2023 முதல் சனி அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 18.02.2023 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (28)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை “குடும்ப ஆசீர்வாதங்களுக்காக” என்னும் கருத்துக்காக நடைபெறும்.
- ★ தவக்காலம் எதிர்வரும் **22.02.2023 சாம்பல் புதன்** வழிபாட்டுடன் தொடங்குகிறது. அன்றைய மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்படும். இதர தவக்கால சிறப்புகள் தனியே தரப்பட்டுள்ளன.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 115. | 07.02.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | பாவ அறிக்கை செய்வோம் |
| 116. | 14.02.2023 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | மனமாற்றம் |
| 117. | 21.02.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 1: ஆணவம் |
| 118. | 28.02.2023 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தலையான பாவம் 2: பேராசை |
| 119. | 07.03.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 3: பொறாமை |



# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

## தவக்காலம் 2023 திருநிகழ்வுகள்

### 1. சிலுவைப்பாதை



1. ஒவ்வொரு நாளும் திருப்பலி முடிவில் சிலுவைப் பாதை நடைபெறும். வார நாள்களில் முதல் திருப்பலியின் முடிவிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டாம் திருப்பலியின் முடிவிலும் நடைபெறும்.
2. ஒவ்வொரு வெள்ளியும் அதிகாலை 04.30 மணிக்கு பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதை நடைபெறும்.
3. ஒவ்வொரு வெள்ளியும் மாலை 06.30 மணிக்கு அன்பியங்கள் வழிநடத்தும் சிலுவைப் பாதை நடைபெறும்.

### 2. சாம்பல் புதன் நோன்பு வழிபாடு



1. சாம்பல் புதன் (22.02.2023) நோன்பு வழிபாடு: நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நோன்புடன் கூடிய சிலுவைப் பாதை, தவக்காலத் தியான உரை, நற்கருணை ஆசீர் நடைபெறும்.

### 3. தலையான பாவங்கள் - தியான உரைகள்

1. செவ்வாய்தோறும் திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் **தவக்கால நற்செய்தியும், திருப்பலியும்- தலைப்பு: ஏழு தலையான பாவங்கள்** (விபரங்கள் பக்கம் 23இல் கொடுக்கப்பட்டுள்ளன)

### 4. வியாழன்தோறும் மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து குறுந்தியானங்கள்

1. 23.02.2023 - சிலை வழிபாடும், இன்றைய புதிய சிலைகளும்
2. 02.03.2023 - சொல்லத் தவறிய பாவங்கள்
3. 09.03.2023 - பாவங்கள் நூறு!
4. 16.03.2023 - இயேசுவின் உவமைகள் காட்டும் பாவங்கள்
5. 23.03.2023 - பாவ அறிக்கையின் சிறப்புகள்
6. 30.03.2023 - ஒப்புரவு அருள்சாதன ஆசீர்வாதங்கள்

### 5. அந்தோனியார் அரங்கில் விவிலியப் பாசறை

1. 28.02.2023 செவ்வாய் மாலை 03.00 மணிக்கு விவிலியப் பாசறை “இறுதிக் காலப் பாவங்கள்”.

### 6. ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்

1. 05.03.2023 ஞாயிறு தவக்காலத் **திருப்பயணம்** நடைபெறும்.
2. 12.03.2023 மாலை 06.00 திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் **தவக்கால நற்செய்திக் கூட்டம்.**



3. 19.03.2023 காலை 09.30 முதல் மாலை 04.00 வரை மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் ஒருநாள் **தவக்காலத் தியானம்.** (அருள்பணி. இசிதோர்)
4. 26.03.2023 மாலையில் ஆயர் தலைமையில் **தவப் பவனி** நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.



## 7. புனித வார நிகழ்வுகள்

1. 02.04.2023 குருத்து ஞாயிறு. காலை 11.00 முதல் பிற்பகல் 03.00 வரை திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் நோன்புடன் கூடிய **குறுந்தியானம்.** (அருள்பணி. ஜெமல்ஸ், பாளை மறைமாவட்டம்).
2. ஏப்ரல் 6,7,8 (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி) புனித வாரத் திரு நிகழ்வுகள் அருள்பணி. ஆன்ட்ரு டிரோஸ் அவர்களின் தலைமையில் நடைபெறும்.



## அன்புடன் வரவேற்கிறோம்

**நமது பங்கில் புதிதாக இணைந்துள்ள பின்வரும் குடும்பங்களை வரவேற்கிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 35. | சதீஸ் குமார் | செபஸ்தியார் | 71 |
| 36. | ஆலன் | தஸ்நேவிஸ் | 63 |
| 37. | டென்சன் | காவல்தூதர் | 78 |
| 38. | பசலிகுமார் | பனிமயம் | 67 |
| 39. | ஆக்னல் | இரக்கத்தின் மாதா | 79 |
| 40. | சத்தியமூர்த்தி | குழந்தைதெரசா | 84 |



## அன்புடன் வழியனுப்புகிறோம்

**நமது பங்கைவிட்டு வெளியேறிய பின்வரும் குடும்பங்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 40 | நசரேன் | சூசையப்பர் | 59 |
| 41. | ஸ்டான்லிபி.ராயர் | இராயப்பர் | 40 |
| 42. | நேவிஸ் | இராயப்பர் | 49 |
| 43. | கிளாரன்ஸ் | இராயப்பர் | 53 |
| 44. | அபினாஸ் | சிறுமலர் | 64 |
| 45. | டாரின் | சிறுமலர் | 53 |
| 46. | நிஷான் | சிறுமலர் | 61 |
| 47. | ஜெஸ்விட் | செபஸ்தியார் | 49 |
| 48. | கிறிஸ்டி | பவுலடியார் | 02 |

# பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"
(2திமொத்தேயு 4:7)



## C. REMGIOUS

| பிறப்பு | வயது | இறப்பு |
|---|---|---|
| 27.03.1955 | 59 | 24.01.2014 |

"உயிர்ப்பும் உயிரும் நானே,
என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்
(யோவா 11:25).

பிரிவால் வருந்தும்

**சகோதரிகள்**

18. தெற்கு எம்பரர் தெரு, தூத்துக்குடி - 1.

# பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஆண்டவரை உயிர்த்தெழச் செய்த கடவுள்
தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார்"
(1கொரி 6:14)



## L. MELBA

| பிறப்பு | வயது | இறப்பு |
|---|---|---|
| 01.10.1994 | 20 | 15.02.2014 |

இறைவா இவருக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருளும்.
முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிரச் செய்தருளும்.

பிரிவால் வருந்தும்

**சகோதரிகள்**

புதுத்தெரு, தூத்துக்குடி - 1.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்"
(திபா 65:4)



மண்ணில்
26.03.1966

விண்ணில்
02.02.2022

# ஜெயந்தி தாமஸ்

வயது : 56

பிரிவின் துயரால் வாடும்

கணவர் : **A. தாமஸ்**

மகன் : **ஜேனஸ்** மகள் : **ஜெனிக்கா**

மற்றும் **மருமக்கள்**

நினைவுத் திருப்பலி

**02.02.2023 காலை 6.30 மணி**
**தூய பனிமய மாதா திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி.**

50/6, பெரிய கோவில் தெரு, தூத்துக்குடி - 628 001.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## 12ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்ந்தது
07.06.1934
உதிர்ந்தது
19.02.2022

மலர்ந்தது
02.12.1936
உதிர்ந்தது
11.02.2010

# திரு. G. குழந்தைசாமி பர்னாந்து

# திருமதி. லிட்வின் பர்னாந்து

*(Ex. Army NB/SUB) (Ex. HWP-Heavy Water)*

*மண்ணில் இருந்து*
*விண்ணிற்கு விரைந்த*
*எம் இமைகளுக்கு*
*எங்கள் இதயத்தின்*
*சமர்ப்பணம்*

இறைவா! உமது
உறவின் உலகினுள் நுழைய
நீர் உம்மிடம் அழைத்த எம்
பெற்றோர்களின் ஆன்மா
உன்னில் அமைதியில் இமைகள்
மூடி இதமாய் இளைப்பாறட்டும்!
அந்த இளைப்பாறுதல் எமக்கு
ஆசியாய் அமையட்டும். ஆமென்.

### மக்கள்

**Sr. K. Raja Reegam** *(Superior)*
*Bon Secours Convent*
**K. Spelmen Fdo - S. Santhini Rodrigo**
**K. Salaicius Fdo - S. Ranes Mascarenhas**

### பேரப்பிள்ளைகள்

**S. Leandin Sahana - R. Darryl Fdo**
**S. Remil Fdo**
**S. Stewarts Fdo**
**S. Sancho Fdo**

### பூட்டி

**D. Selvi Anselli Fdo**

SHINY Ph : 98421 31493